செய்தி வெளியீடு எண்: 91 நாள் : 07/02/2013

**<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பெயரில்,</u>**
**<u>ஒரு கோடியே மூன்று இலட்சம் ரூபாய் செலவில்,</u>**
**<u>கிராம நிருவாக அலுவலர்களுக்கு நிலஅளவை மற்றும் நிருவாக அளவிலான பயிற்சிகள்</u>**

வருவாய்த்துறையின் அடிப்படை அங்கமான ஒவ்வொரு கிராமத்திற்கும், கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு, கிராமங்களில் வாழும் ஏழை எளியோர் தங்களின் கோரிக்கைகளை எளிதில் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில், தமிழக அரசு கிராம நிருவாகத்தைச் செம்மை படுத்தியுள்ளது.

மாநிலம் முழுவதும் 12,614 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களில், தற்பொழுது 9,105 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணியிடங்களை பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், காலியாக உள்ள கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களை நிரப்பிட விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, அவர்களின் பணிகளை எளிதாக்கிடும் வகையில் மடிக்கணினி மற்றும் போதிய நிருவாக ரீதியான பயிற்சிகளும் அளிக்கப்பட வேண்டும் என்றும் வருவாய்த்துறை தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்கள்.

அதனடிப்படையில், தமிழ்நாடு தேர்வாணையம் மற்றும் கருணை அடிப்படையில் தற்பொழுது 4,615 கிராம நிருவாக அலுவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு 22 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில், மடிக்கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் மற்றும் கணினிப் பயிற்சியும் தற்பொழுது ‘எல்காட்’ நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.

புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள கிராம நிருவாக அலுவலர்களின் திறனை மேலும் மேம்படுத்திடும் வகையில், ஒரு கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில், 118 மையங்களில், நில அளவை மற்றும் நிருவாக ரீதியான பயிற்சிகளை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பெயரில் கிராம நிருவாக அலுவலர்களுக்கான பயிற்சி முகாமினை நாளைய மறுதினம் (09.02.2013) அன்று அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.‘தோப்பு’ என்.டி. வெங்கடாசலம் அவர்கள் ஈரோடு மாவட்டத்திலும், கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் டி. எஸ். ஸ்ரீதர் இ.ஆ.ப., அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்திலும், முதன்மைச்செயலர் / நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் முனைவர் ஆர்.கண்ணன் இ.ஆ.ப., அவர்கள் விழுப்புரம் முதன்மைச் செயலர் / நில நிருவாக ஆணையர் திரு. யத்தீந்தரநாத் ஸ்வேன் இ.ஆ.ப., அவர்கள் வேலூர் மாவட்டத்திலும் தொடங்கி வைக்கிறார்கள்.

ஏனைய பிற மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் பயிற்சி தொடங்கி வைக்கப்படுகிறது. ஏறத்தாழ பத்து வாரங்களுக்கு அளிக்கப்படும் இப்பயிற்சியினை முறையாக பெற்று, நன்முறையில் செயலாற்றிட அனைத்து கிராம நிருவாக அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் நிருவாகம், எழிலகம், சென்னை 5.

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9